எல்லா இடத்திலும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகள் வெட்டப் படுகின்றன. இதன் மூலம் குடிதண்ணீர் தட்டுப்பாடு தீர்ந்து கொண்டு இருக்கும் எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. புஷ்பராஜ் : அவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நடப்பு ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது. அதைப்போல் பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற புதுக்கோட்டைப் பகுதியிலும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை

*439 வின—திரு. ரா. பெரியசாமி : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூரில் இயங்கிவந்த கந்தசாரி சர்க்கரை ஆலை மூடியிருப்பதற்குக் காரணம் என்ன ?

(ஆ) இந்தத் தொழிற்சாலையைத் திறக்க அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : *

ஒரு விவர அறிக்கை * சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

* 374-375-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த ஆலை விரைவில் மூடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆலையில் வேலை செய்த தொழிலாளர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு மாற்றுத் திட்டம் அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 3—4—1976 முடிய 42 பேர்கள் இருந்தார்கள். இப்போது 15 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களாகவே மாற்றுவேலை பார்த்துக்கொண்டதால், தொழிலாளர் பிரச்னை இங்கு எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளில் சர்க்கரைக்காகக் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர்களிலே பயிர்செய்து, இப்போது கரும்பு தேங்கிக் கிடக்கின்றது. எனவே, இத்தகைய கந்தசாரி சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கொடுப்பதன் மூலம், இந்த நிலைமையை மாற்ற முடியுமென்று நான் நினைக்கிறேன். எனவே, அத்தகைய கந்தசாரி சர்க்கரை ஆலைகளுக்கு லைசன்சுகள் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கந்தசாரி சர்க்கரை ஆலைகளை வெற்றிகரமாக நடத்த முடியாது என்று விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலையிலே ஒரு சிறு ரிப்பேர் என்றாலும், வட மாநிலத்திலே இருந்து ஆட்கள் வந்துதான் சரி செய்ய முடியும் என்கின்ற நிலையிருக்கிறது. எனவே, கந்தசாரி சர்க்கரை ஆலைகளை வட மாநிலத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். அதைத் தமிழ் நாட்டிலே லாபகரமாக நடத்த முடியாது என்ற காரணத்தினால், இந்த நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது.